17577/ஓ1/2010
6/9/2010

18381

112

06 SEP 2010
தலைமைச் செயலகம் சென்னை-9
ஆதி (ம) ப.ந. துறை

சுருக்கம்

கருணை அடிப்படையில் பணி நியமனங்கள் – பணியிடை மரணமடைந்த அரசு ஊழியரின் வாரிசுதாரருக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்குதல் – விண்ணப்பம் அளிக்கும் போது திருமணமாகாமல் இருந்து பின்னர் திருமணமான பெண் வாரிசுதாரருக்கும் பணி நியமனம் வழங்குதல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யு.2) துறை

அரசாணை (நிலை) எண். 165 நாள். 30.8.2010

படிக்க:-

1. அரசாணை (நிலை) எண்.560, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை, நாள்.3.8.1977.
2. அரசாணை (நிலை) எண்.155, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை, நாள்.16.7.1993.

---

ஆணை:-

பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் நெருங்கிய உறவினர்கள் என வரையறுக்கப்பட்டுள்ள அரசு ஊழியரின் மனைவி/ கணவன்/ மகன்/ திருமணமாகாத மகள் ஆகியோர் கருணை அடிப்படையில் பணி நியமனம் பெறத் தகுதியுடையவர் என்று ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

2. பார்வை இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில் கணவனால் கைவிடப்பட்டு, பணியிடை மரணமடைந்த அரசு ஊழியர் குடும்பத்தில் வசித்து வரும் மகளுக்கும் மற்றும் அவ்வாறு வசித்து வரும் விதவை மகள் மற்றும் விவாகரத்துப் பெற்ற மகளுக்கும் பணியிடை இறந்த அரசுப் பணியாளரின் வாரிசுதாரரான விதவை பணி நியமனம் வழங்கிட ஒப்புதலளிக்கும் நேர்வில் அவர்களுக்கும் பணி நியமனம் செய்யப் பரிசீலிக்கலாம் என ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

3. தற்போது, கருணை அடிப்படையில் பணி நியமனம் வேண்டி விண்ணப்பம் அளிக்கும் போது திருமணமாகாமல் இருந்து பணி நியமனம் வழங்கப்படும் முன்னர் திருமணம் செய்து கொண்ட நேர்வுகள் குறித்து நீதிமன்றத் தீர்ப்பு மற்றும் பல்வேறு துறைகளிலிருந்து பெறப்பட்ட கருத்துக்கள் இத்துறையால் பரிசீலிக்கப்பட்டன.

4. இந்நிலையில், கருணை அடிப்படையிலான பணி நியமனங்கள் கோரும் நேர்வுகளில், பணியிடை மரணமடைந்த அரசு ஊழியரின் நெருங்கிய உறவினர்கள் என வரையறுக்கப்பட்டுள்ள நபர்களில், திருமணமாகாத மகள் என்ற நிலையில் பணி நியமனம் கோரி விண்ணப்பம் அளித்து, பணி நியமனம் வழங்கப்படுவதற்கு முன்னரே திருமணம்

122

செய்து கொண்டவர்கள் கருணையடிப்படையிலான பணி நியமனத்திற்கு இதர தகுதிகளை நிறைவு செய்யும் பட்சத்தில், அவர்களுக்கும் பணி நியமனம் வழங்கிட வழிவகை செய்யும் வகையில் கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணைக்கு தெளிவுரை வழங்கி இதன்மூலம் ஆணையிடப்படுகிறது:-

(1). திருமணமாகாத நிலையில் உள்ள பெண்ணுக்கு, அக்குடும்பத்தில் உள்ள பிற வாரிசுதாரர்கள் அளித்த மறுப்பின்மைச் சான்றிதழ், திருமணமான பின், அப்பெண்ணுக்கு பணி அளிக்கப்படும் போது, மீண்டும், மற்ற வாரிசுதாரர்களால் மறுப்பின்மைச் சான்றிதழ் வழங்கப்பட வேண்டும்.

(2). திருமணம் செய்து கொண்ட பின்னர் பணி வாய்ப்பு பெறும் தனியர், தனது பெற்றோரின் குடும்பத்திற்கு உதவிபுரியும் வகையில் உறுதி ஆவணம் வழங்கப்பட வேண்டும்.

(3). கருணை அடிப்படையில் பணிவாய்ப்பு கோரியுள்ள திருமணமாகாத பெண்ணைத் திருமணம் செய்து கொள்ளவிருக்கும் நபர், எதிர்காலத்தில் அவரால் அவரது பெற்றோருக்குச் செய்யும் உதவிக்கு மறுப்பு எதும் ஏற்படுத்த மாட்டேன் என்ற உறுதி மொழியை அளிக்க வேண்டும்.

//ஆளுநரின் ஆணைப்படி//

த. பிரபாகர ராவ்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்

தலைமைச் செயலகத்தின் அனைத்து துறைகள், சென்னை -600 009
தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைச் செயலகம் சென்னை – 600009
அனைத்துறை தலைவர்கள்
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்/ மாவட்ட நீதிபதிகள்
மாவட்ட உரிமையியல் நீதிமன்ற நீதிபதிகள்
பதிவாளர், உயர்நீதிமன்றம் சென்னை -104
பதிவாளர், சென்னை உயர்நீதிமன்ற கிளை - மதுரை
அரசு வழக்குரைஞர், சென்னை / மதுரை
முதன்மை மாநிலக் கணக்காயர், சென்னை –600 018
மாநிலக் கணக்காயர் ( தணிக்கை) சென்னை 600 018
செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை 600 002.
இயக்குநர் , கருவூலகத்துறை சென்னை 600 035
அனைத்து மாவட்ட கருவூலகத் தலைவர்கள்
அனைத்து சம்பளக் கணக்கு அலுவலர்கள்
முதலமைச்சர் அலுவலகம் சென்னை -600 009.
பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை, சென்னை–9

சட்டத்துறை, சென்னை—9
தொழிலாளர் நல அமைச்சரின் தனிச் செயலர், சென்னை 600 009.

<u>நகல்:-</u>

முதன்மைச் செயலாளரின் தனிச் செயலாளர்,
தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை சென்னை –600 009.
அனைத்துப் பிரிவுகள், தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு துறை, சென்னை-600009

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்
31.08.2018.